[31st January 1963

திரு. ஆர். ரங்கசாமி : சர்க்கார் துறையிலே ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்துவதாக சென்ற ஆண்டிலே கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்களே, அது எந்த நிலைமையில் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் சர்க்காரின் கொள்கை. ஆனால், அதற்கு வேண்டிய சுண்ணாம்புக்கல் கிடைப்பதாகத் தெரியவில்லை. சுண்ணாம்புக்கல் கிடைக்கக்கூடிய க்வாரி கிடைத்தால் சர்க்கார் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு முறையிலே நடப்பது போல், சிமெண்டு தொழிற்சாலையையும் கூட்டுறவு முறையில் அமைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கூட்டுறவு முறையில் செய்யக்கூடிய தொழில் அல்ல இது.

திரு. எ. கொ. பாலகிருஷ்ணன் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுக்காவில் வானூர் பகுதியில் சுண்ணாம்புக்கல் அதிகமாக கிடைக்கிறது. ஆகையால் சர்க்கார் அந்த இடத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைம் ஸ்டோன் எங்கெங்கு கிடைக்கிறதென்று ஜியலாஜிகல் சர்வே டிபார்ட்மெண்டு பரிசீலனை செய்து ரிபோர்ட் கொடுத்திருக்கிறது. ஏதோ கொஞ்சம் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு தொழிற்சாலையை அமைக்க முடியாது. தொழிற்சாலை அமைக்க வேண்டிய அளவுக்கு தென் ஆர்க்காடு ஜில்லாவில் சுண்ணாம்பு இல்லை.

திரு. வை. சங்கரன் : புதுக்கோட்டை முன்பு சமஸ்தானமாக இருந்த காலத்தில், அங்கு கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் பெரும்பாலும் செங்கல்லாலும் சுண்ணாம்பினாலும்தான் கட்டப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் அதை பரிசீலனை செய்து அது மாதிரியாக கூடுமானவரை இங்கும் கட்டுவதற்கு யோசனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கல்லணையை எடுத்துக் கொண்டால் அது ஆயிரம் வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டும் இன்னும் நன்றாக இருக்கிறது. ஆகையால் பொதுவாக இதைப் பற்றி ஆலோசனை செய்யவேண்டிய அவசியம் இல்லை.

District Development Council (Co-option of members)

*26 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal for the co-option of lady members and Scheduled Caste members in the District Development Councils; and

(b) if so, the details thereof?

31st January 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) The question does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலில் மாதர் பிரதிநிதித்வம் இல்லாததால் அந்த எற்பாட்டைச் செய்ய சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அபிவிருத்தி கவுன்சிலில் பிரதிநிதித்வம் அளிக்க வேறு உத்தேசம் இல்லை என்று என் பதிலில் சொன்னேன்.

Loans to hand-loom weavers

* 27 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal for waiving interest on loans advanced to handloom weavers for the construction of houses?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள நெசவாளர்களின் கஷ்ட நிலைமையை யொட்டி இந்தப் பிரச்சனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த யோசனையை இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பே நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறது. அவர்கள் அதைப் பரிசீலனை செய்து கடனை வாங்கும் தொகைக்கு வட்டி விலக்கு அளிப்பதற்கு வழியில்லை என்று 3—11—1952-ல் மத்திய சர்க்கார் முடிவு கூறிவிட்டார்கள்.

திரு. வை. சங்கரன் : இந்த எற்பாட்டினால் வட்டியையும் முதலையும் எத்தனைத் தவணைகளில் வாங்குவார்கள் ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இருபது வருஷ தவணைகளில் வசூல் செய்வார்கள். வட்டி 4½ சத விகிதம் என்று நினைக்கிறேன். நிச்சயமாக எவ்வளவு என்று தெரியாது.

Teachers (Payment of salary)

* 28 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any proposal to disburse salaries to teachers through Post offices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. எஸ். மாதவன் : ஆசிரியர்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்குச் சென்று சம்பளம் வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கென தபால் மூலமாக சம்பளத்தை அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன் மூலமாக வினியோகிப்பதற்குத்தான் கமிஷனரை நியமித்திருக்கிறோம். தபால் மூலமாக அனுப்புவதற்கு உத்தேசம் இல்லை.